10 Apr 2019
Makkal Osai, Malaysia

Author: No author available • Section: News • Page: 7 • Printed size: 149.00cm²
Region: KL • Market: Malaysia • Photo: Full Color • ASR: MYR 975.00
Item ID: MY0035667592

isentia.mediaportal
Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.



### தோக்கியோ மெரின் காப்புறுதி நிறுவன ஏற்பாட்டில்

# காராக்கில் பல்வேறு சமூக நடவடிக்கைகள்

மக்கள் நலமாக, வளமாக தங்களின் வாழ்க்கையை சீரும் சிறப்புமாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற உன்னத நோக்கோடு காராக் தமிழ்ப்பள்ளியில் காலை முதல் மாலை வரை மக்கள் நலம் நாடும் தோக்கியோ காப்புறுதி நிறுவனம் பல்வேறு சமூக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக காப்புறுதித் துறையின் உயர் அதிகாரி ஆ.சு. மலையரசன் தெரிவித்தார்.

தன்முனைப்புப் பேருரை வழங்கிய சூப்பர் மைண்ட் டைனமிக் தன்முனைப்புச் செம்மல் மு. கணேசன் வாழ்க்கையில் வெற்றி என்பது அனைவருக்கும் சொந்தம். விடாமுயற்சியும் சிறந்த பண்புகளையும் வாழ்க்கை நெறிகளாகக் கொண்டால் எல்லாராலும் சிறந்த வாழ்க்கையை, வெற்றியைப் பெற முடியும் என்று உரையாற்றினார்.

பொதுமக்களின் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும் என்பதால் ரத்த அழுத்தம், உடல் எடை, நீரிழிவு, கொலஸ்ட்ரோல் அளவு என அனைத்தும் முற்றிலும் இலவசமாக சோதிக்கப்பட்டது. பொதுமக்கள் ஆர்வத்தோடு திரளாகக் கலந்து பயனடைந்தனர்.

மேலும் மாணவச் செல்வங்களுக்கு பாத்தே நெய்தல், ஓவியப் போட்டியும் இளைஞர்களுக்கு புட்சால் கால்பந்தாட்டப் போட்டியும் நடத்தப்பட்டது.

வெற்றியாளர்களுக்கு முதல் பரிசாக 500 வெள்ளியும் 2ஆம் பரிசாக 300 வெள்ளியும் 3ஆம் பரிசாக 200 வெள்ளியும் தோக்கியோ காப்புறுதி நிறுவனத்தின் ஆ.சு. மலையரசன் வழங்கினார்.

பதிவுக்கு கட்டணம் ஏதும் இல்லை. இந்நிறுவன சமுதாய சேவையை தம்முடைய சட்டமன்றத் தொகுதியில் நடத்திய தோக்கியோ காப்புறுதி நிறுவன சமூக நடவடிக்கையை காமாட்சி பாராட்டினார்.